## 37. திருவாலவாய்.

*பண் - கௌசிகம்.*

**பொ**ன்னைப் பூமியைப் புன்புல வாக்கையை
மின்னை நாடி யுழன்றுள்ள வீணனேன்
தன்னை யாண்டவொர் தன்மையென் னாலவாய்
அன்னை யேயரு ளேகுகப் பிரமமே. 1

**க**ட்டு மாடை கழற்றினை கந்தனை
மொட்டை யிட்டனை மோக மறுத்தனை
எட்டி நீமறைந் திட்டதென் னாலவாய்ச்
செட்டி யேயருள் செய்குகப் பிரமமே. 2

இஞ்ஞான்று ஜடாமஸ்தகராயுள்ள அடிகள், சில ஆண்டுகட்கு முன்னர் முண்டக மஸ்தகராயு மிருந்தாரென்பதை இவ்விரண்டாந் திருப்பாட்டிற் "கந்தனை மொட்டையிட்டனை" என்றருளிச் செய்தமை காட்டுகின்றதன்றோ. கம்=தலை.

**பு**ண்ணி யந்தெரி யாவெறும் பொக்கனேன்
எண்ண மோர்ந்தரு ளெந்தையிங் கேயுனை
நண்ணி னேன்சுக நல்கருட் காலவாய்
அண்ண லேயெனை யாள்குகப் பிரமமே. 3

**ஆ**க மோடென தாவியு முன்றனக்
கேகொ டுத்துய்ய வெண்ணிய வென்னகத்
தேகு ளிர்ந்தரு ளீயெழி லாலவாய்
ஏக னேயெனை யாள்குகப் பிரமமே. 4

**எ**ட்ட நில்லென நீயென்னை யேதள்ளச்
சிட்ட னானபின் ஞாயஞ் செலுங்கொலோ
நட்ட மின்றரு ணல்குதி யாலவாய்
இட்ட னேயெனை யாள்குகப் பிரமமே. 5

**ப**ருதி முன்னிரு ணிற்குங்கொல் பக்கமாம்
அருளின் முன்மல நிற்குங்கொ லவ்வருட்
பொருளைத் தந்தொரு பூர்த்திசெய் யாலவாய்ப்
பெருமை யேயெனை யாள்குகப் பிரமமே. 6

**நி**த்த லுங்கழ னெஞ்சக மாக்கியால்
எத்த லத்துமு னேணருள் காத்திடச்
சித்தம் வைத்தருள் சீருய ராலவாய்
அத்த னேயெனை யாள்குகப் பிரமமே. 7

**பா**ச மும்பசு வுந்திறம் பாவொளி
வீசு நின்னரு ளின்றிவி ளங்குமோ
ஆசை யாயின னேயதற் காலவாய்
ஈச னேயெனை யாள்குகப் பிரமமே. 8

**எ**ன்ன கப்புல மென்று மிருக்குநீ
என்னை யின்னுமி ரண்டறக் கோடலின்
றன்னி யஞ்செய னீதிகொ லாலவாய்
மன்னெ னத்திகழ் மாகுகப் பிரமமே. 9

**கு**ற்றம் யாவும்பொ றுத்தருள் கூர்தியால்
அற்ற மற்றலங் காரம திர்த்துளோன்
முற்றும் வாழ்த்திய மூர்த்திநல் லாலவாய்
உற்ற வொப்பில ருட்குகப் பிரமமே. 10

மன்மத வருடம் புரட்டாதி மாதம் 2ஆம் தேதி மங்களவாரம்.

---

*10.* ***அற்றம்*** = *மறைவு, சோர்வு ;* ***சே - திவாகரங்*** *காண்க.*